சுருக்கம்

பணியமைப்பு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. த. பிரபு (த/பெ. என். தனசேகரன் (லேட்), முன்னாள் சிறப்பு நிலை அலுவலக உதவியாளர்) – தொழில் வணிகத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அரசாணை மற்றும் அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 12(b)(b)(b) மற்றும் 23(a)(i) தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 20(6)(b), மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்த்தி பணிவரன்முறை செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பணி||(1)) துறை

அரசாணை (டி) எண்.11

நாள் 10.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி வருடம், தை 28

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
3. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கடித ந.க. எண்.8906/இபி1/2006, நாள் 24.07.2019, 30.09.2019 மற்றும் 05.02.2020.

---

ஆணை:–

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் சிறப்பு நிலை அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு. என். தனசேகரன், 22.05.2001ல் காலமானதால், அன்னாரின் குடும்பத்தின் வறிய நிலையை கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் கூடுதல் தலைமைச் செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.8906/இபி1/2006, நாள் 06.07.2016–ல் திரு. த. பிரபு என்பவருக்கு இளநிலை உதவியாளராக மைய அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து தனியர் உடல் தகுதி சான்றுடன் இளநிலை உதவியாளராக 11.07.2016 முற்பகல் தொழில் வணிகத் துறையில் பணியேற்பு செய்து கொண்டுள்ளார் என்றும், அவர் பணியில் சேர்ந்த 11.07.2016 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் மேலே பார்வை 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, தொழில் வணிகத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. த. பிரபு தொடர்பான அனைத்து ஆவணங்களும் கவனமாக ஆய்வு செய்த பின்னர், திரு. த. பிரபு, இளநிலை உதவியாளர் (த/பெ. என். தனசேகரன் (லேட்), முன்னாள் சிறப்பு நிலை அலுவலக உதவியாளர்) அவர்களின் பணியினை 11.07.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58–ன் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு தளர்வு மற்றும் விதிகளுக்கும் அரசாணைக்கும் விலக்களிக்கப்படுகிறது. மேலும் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

அ) தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 நடைமுறைக்கு (15.09.2016) வருவதற்கு முன்னர், தனியருக்கு, 11.07.2016 அன்று பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதால், அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 12(b)(b)(b), தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 20(6)(b) அதாவது அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் 22.06.2001 அன்று விண்ணப்பிக்கும் போது தனியர் 18 வயதை நிறைவு செய்யவில்லை. எனவே, வயது குறித்த விதிக்கு விலக்களிக்கிறது.

ஆ) அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii) (பணி நியமன நாளிலிருந்து பணப்பலன்கள் பெற ஏதுவாக) தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)–ஐ தளர்வு செய்கிறது.

இ) குறும வயது மற்றும் பணி வாய்ப்புக் கோரி அரசுப்பணியாளர் மரணமடைந்த மூன்றாண்டுகள் கடந்த நிலையில் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஆகியவை குறித்து தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020–னை தளர்வு செய்கிறது.

3. தனியரின் பணிவரன்முறை குறித்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.1575/க்யூ1/2021–1, நாள் 03.02.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண்.3512/ஜி1/2021–1, நாள் 08.02.2021 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு. த. பிரபு,
இளநிலை உதவியாளர்,
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம்,
கிண்டி, சென்னை–32. (இரண்டு நகல்கள்).

...ல் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
...னை–32. அவர்கள் வழியாக).
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32.
தலைமை கணக்கு அலுவலர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ. /உதிரி (கோ. எண்.6499/பணிII(1)/2019).

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

10022021

பிரிவு அலுவலர்

10/2/21